நகர் ஊரமைப்பு துறை (DTCP) ஈரோடு மாவட்டம்

நசியனூர் பேரூராட்சி

ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், நசியனூர் பேரூராட்சி மற்றும் நசியனூர் "ஆ" கிராமம்,

ரீ.ச.எண்.394/1A மற்றும் 394/3A - ல் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு: (1 : 400) Online Application no: 202202001013956 நாள் : 30/05/2022

கோரப்பு எண் :2388/ 2022-ஈ.மா - 3

வ

குறிப்பு:

மனைப்பிரிவின் பரப்பு : 1.15 ஏக்கர் (அ) 4650.00 ச.மீ

கோரிய மனைகள் : 17

ஒதுக்கிய மனைகள் : 17

மனைப்பிரிவு சாலை

நிலையிலுள்ள சாலை

பொது ஒதுக்கீடு :

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:

1. மனைப்பிரிவு சாலையின் பரப்பு : 1043.12 ச.மீ

2. பூங்கா

தேவையான பரப்பு : (மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - மனைப்பிரிவுசாலையின் பரப்பு) X 10%
(4650.00 - 1043.12) X 10% = 360.68 ச.மீ

பூங்கா ஒதுக்கீடு : 365.00ச.மீ பரப்பளவுக்கு அரசு வழிகாட்டி மதிப்பீடு தொகை செலுத்தப்பட்டது.
(E-Challan No: 20221209018294) Date: 15-12-2022

3. பொது உபயோகம் (A) : 22.95 ச.மீ - (0.63%)
தான ஆவணம் எண்: 8161/2022, நாள்: 12.10.2022-ல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

மின்வாரியத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை :-

4. பொது உபயோகம் (B) : 20.72 ச.மீ - (0.57%)
TANGEDCO பரப்பு தான ஆவணம் எண்: 8160/2022, நாள்:12.10.2022-ல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

கட்டிட வரம்பு:

9.0மீ -க்கு மேல் 12.0மீ வரை அகலமுள்ள மனைப்பிரிவு சாலைகளுக்கு 1.50மீ விடப்பட வேண்டும்.

மூலை முடக்கு:

12.0மீ வரை அகலமுள்ள மனைப்பிரிவு சாலைகளுக்கு 1.50மீ X 1.50மீ விடப்பட வேண்டும்.

நிபந்தனைகள்:

1. அரசாணை எண்- 18, ந.நி(மு) கு.வ.துறை(MAI) நாள்: 04.02.2019 ன் படி மனைப்பிரிவில் அமையும் சாலை, பொது உபயோகம்(A)பூங்கா ஒதுக்கீட்டினை உள்ளாட்சிக்கு தானப்பத்திரம் வாயிலாகவும் பொது உபயோகம் (B) பகுதியினை TANGEDCO-விற்கு தானப்பத்திரம் வாயிலாகவும் மனுதாரர்கள் ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும்.
2. அரசானை எண் 181 வீ.வ(ம) ந.வ.துறை நாள் 09-12-2020-ல் தெரிவித்துள்ளவாறு சாலைகள், மழைநீர் வடிகாலவசதி மேல்நிலை நீர் தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் (ம) தெருவிளக்குகள் ஆகியவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
3. அரசானை எண்: 141 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்:16.07.2022-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட வில்லை என்றும், செயல் அலுவலர், நசியனூர் பேரூராட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்றும் அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
6. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'X4' அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள்பார்வைக்கு நிரந்தரமாக பராமரிக்கப்பட வேண்டும்.
8. உத்தேச மனைப்பிரிவு சாலைகளுக்கு மனுதாரால் தார்சாலை அமைக்கப்பட்டு நசியனூர் பேரூராட்சி பொறியாளர் அவர்களிடம் தரம் குறித்து சான்று பெறப்பட்ட பின்னர் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

ம.வ / ஈ.மா எண். 334 / 2022

துணை இயக்குநர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்.

நசியனூர் பேரூராட்சி அலுவலகம் * ஈரோடு மாவட்டம் *


நசியனூர் பேரூராட்சி அலுவலகம்

நாள்: 21.03.2024

இவ்வலுவலக ந.க.எண்: 344/2023 நாள்: 21.03.2024-ல் கோரப்பட்ட நிலத்தினை - -கோரப்பட்டபடி, நசியனூர் பேரூராட்சி மன்றத் தீர்மானம் எண்: 25/2024 நாள்: 16.02.2024-ன்படி ஒப்புதல் வழங்கியதற்கு போதும், இவ்வரை படத்தில் கோரப்பட்டவாறு மனைப்பிரிவு அமைத்திட ரூ.கோரிய இறுதி ஒப்புதல் வழங்கி ஆணையிடப் பட்டுள்ளது.

செயல் அலுவலர்,
நசியனூர் பேரூராட்சி.

21/3/24



அளவர் / உதவி வரைவாளர் 29/12/22

வரைவாளர் நிலை - 3

மேற்பார்வையாளர் 29/12/22

கட்டிடகலை / திட்ட உதவியாளர் 29/12/22